tamilguru.lk

# සිසු හෙද පුහුණුවට විද්‍යුත් මාධ්‍යයෙන් බඳවාගැනීම - 2023

# இணையத்தளம் ஊடாக மாணவ தாதியர் பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு – 2023

# Online Recruitment for Student Nursing Training – 2023

http://recruit.health.gov.lk/

tamilguru.lk

**சுகாதார அமைச்சின்**

**2023 ஆம் ஆண்டுக்கான தாதியர் பயிற்சி கற்கை நெறிக்கு ஆட்சேர்ப்பதற்கு இணையத்தள வழியாக சமர்ப்பிக்க வேண்டிய விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள்**

1. விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன், வர்த்தமானி அறிவித்தல் மற்றும் இணையத்தளம் வழியாக விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதற்காக வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்றாக வாசிக்கவும்.

2. விண்ணப்பங்களை சுகாதார அமைச்சின் www.health@gov.lk எனும் இணையத்தளத்தினூடாக மட்டுமே சமர்ப்பித்தல் வேண்டும்.

3. 2019 ஆம் ஆண்டில் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2019 ஆம் ஆண்டில் (புதிய பாடத்திட்டம்) மற்றும் 2020 ஆம் ஆண்டு ஆகிய ஆண்டுகளில் ஏதாவதொரு கல்வி பொது தராதர (உ.தர) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் தோற்றி சித்தியடைந்தவர்கள் மட்டுமே இதற்காக விண்ணப்பிப்பதற்கு தகுதி பெறுவார்கள். (உரிய விபரங்கள் அறிவித்தலின் இலக்கம் 02 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கம் 01 அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.)

4. விண்ணப்ப முடிவுத் திகதி 2023.10.18 ஆகும். ஒரு விண்ணப்பதாரியினால் ஒரு விண்ணப்பம் மட்டுமே சமர்ப்பிக்க முடியும்.

5. **கவனிக்கப்பட வேண்டியவை:**

5.1. ஒரு விண்ணப்பதாரர் ஒரு விண்ணப்பத்தை மட்டுமே சமர்ப்பிக்க முடியும். ஒன்றுக்கும் மேற்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்களின் அனைத்து விண்ணப்பங்களும் எவ்வித அறிவிப்புகளும் இன்றி நிராகரிக்கப்படும். 2019 மற்றும் 2020 ஆகிய இரண்டு வருடங்களிலும் க.பொ.த (உ.தர) பரீட்சையில் சித்தியடைந்திருந்தாலும் ஒரு விண்ணப்பதாரரினால் ஒரு விண்ணப்பத்தை மட்டுமே சமர்க்கப்பிக்க முடியும். அத்தகைய விண்ணப்பதாரர்கள் தமது விருப்பத்திற்கு அமைய தேர்ந்தெடுக்கப்பட்ட வருடத்திற்காக விண்ணப்பிக்க முடியும். இரண்டு வருடங்களுக்காகவும் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கக்கூடாது. அவ்வாறின்றி இரண்டு வருடங்களிலும் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்களின் அனைத்து விண்ணப்பங்களும் எவ்வித அறிவிப்புகளும் இன்றி நிராகரிக்கப்படும்.

5.2. கடந்த பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்பு தொடர்பாக அவதானம் செலுத்தும் போது, ஒரு மாணவர் அரசாங்கத்தின் இலவசக் கல்விச் சலுகையின் கீழ் பல்வேறு அரச நிறுவனங்களினால் நடாத்தப்படும் கற்கை நெறிகள் பலவற்றில் இணைவதால், தகுதியுடைய பல மாணவர்களுக்கு இதுபோன்ற ஒரு வாய்ப்புக்கூட கிடைக்காமல் இருப்பது அவதானிக்கப்பட்டது. இது தவிர இந்த நிலை காரணமாக அரசாங்கத்தின் பணம் வீண் விரையமாகி வருவதுடன், பாடநெறியின் இறுதியில் எதிர்பார்த்த எண்ணிக்கையில் பயிற்றுவிக்கப்பட்ட தொழில்வல்லுனர்களின் எண்ணிக்கை இல்லாத காரணத்தால் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் திட்டமிட்ட இலக்குகளை அடைய முடியாதுள்ளது. எனவே, மேற்படி நிலைமையைக் குறைப்பதற்கு ஒவ்வொரு விண்ணப்பதாரர்களுக்கும் ஒரு சந்தர்ப்பத்தையாவது வழங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகள் இந்த வர்த்தமானி அறிவித்தலின் பந்தி இலக்கம் 5 இல் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி, இலக்கம் 5.1 முதல் 5.5 வரையிலான துணைப் பந்திகளில் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளவாறு தகுதியற்ற ஒருவர் இதற்காக விண்ணப்பித்தல் கூடாது. எவ்வாறாயினும், அத்தகைய தகுதியற்றவர்கள் இதற்கு விண்ணப்பித்து, பின்னர் கண்டறியப்பட்டால், வர்த்தமானி அறிவித்தலின் துணைப் பந்தி 6.3 இன்படி அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

5.3. கடந்த ஆட்சேர்ப்புகளில், உண்மைக்குப் புறம்பான தகவல்கள் (தவறான பரீட்சை ஆண்டுகள், பாடங்கள், பெறப்பட்ட மதிப்பெண்கள் போன்றவை) உள்ளிட்டு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன், சில விண்ணப்பதாரர்கள் பொய்யான தகவல்களை உள்ளிட்டு தயாரிக்கப்பட்ட சான்றிதழ்கள் நேர்முகப் பரீட்சைக்கு சமர்ப்பிக்கப்பட்டமையும் அவதானிக்க முடிந்தது. இது ஒரு பாரிய தவறாகும். எனவே, எந்தவொரு விண்ணப்பதாரரும் தாம் சமர்ப்பிக்கும் இணையவழி விண்ணப்பத்தில் தவறான தகவல்களை உள்ளிடக்கூடாது. தவறான தகவல்களை உள்ளிட்டு சமர்ப்பிக்கப்படும் அனைத்து விண்ணப்பங்களும் எவ்வித அறிவிப்புகளும் இன்றி நிராகரிக்கப்படும். மேலும், அத்தகைய விண்ணப்பதாரர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பப்படும் என்பதுடன், அரசாங்க சேவைக்கு இணைய முடியாதவர்களின் கருப்புப் பட்டியலில் அவர்களின் பெயர்கள் சேர்க்கப்படும்.

5.4. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் முதலில் இந்த வர்த்தமானி அறிவித்தலில் மற்றும் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இணையவழி விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்றாக படித்துப் புரிந்து கொண்டு, இந்த கற்கைநெறிக்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கத் தகுதியானவரா என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும். அதன் பின்னர் வர்த்தமானி அறிவித்தலின் 7.2 பந்தியின்படி, எந்தவொரு இலங்கை வங்கிக்கிளையில் 1000/= பணத்தை செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீற்று, 9.4, 9.5, மற்றும் 9.6 ஆகிய பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை தயார்செய்து விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதன் மூலம் விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கான செயல்முறையை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியும்.

**6. விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான செயல்முறை :**

விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கான செயல்முறைகளை ஆரம்பிக்க முன்னர் விண்ணப்பதாரியிடம் இருக்க வேண்டிய ஆவணங்கள் மற்றும் விபரங்கள்

- தேசிய அடையாள அட்டை
- உங்களின் உயரம் (செ.மீட்டரில்) குறிப்பிடப்படல் வேண்டும்
- க.பொ.த (சா.தரம்)/ (உ.தரம்) சான்றிதழ்கள் மற்றும் Z மதிப்பெண்களைக் காட்டும் ஆவணம்
- தொடர்பு கொள்ள வேண்டிய இரண்டு கையடக்க தொலைபேசி இலக்கங்கள்
- வர்த்தமானி அறிவித்தலின் 7.2 பிரிவின் படி ரூபா 1000/= பணத்தை செலுத்திய பின்னர் வங்கியினால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு

7. கையடக்க தொலைபேசி இலக்கமொன்றை உள்ளிடுதல் வேண்டும். விண்ணப்பதாரி தனது அல்லது தாய் அல்லது தகப்பன் அல்லது பாதுகாவலரின் தொலைபேசி இலக்கத்தையும் உள்ளிடலாம்.

8. விண்ணப்பதாரி 1000/= ரூபா பணத்தை இலங்கை வங்கியின் தப்ரோபேன் கிளையின் இலக்கம் **7041318** எனும் சுகாதார அமைச்சின் செயலாளரின் கணக்கிற்கு செலுத்த வேண்டும் என்பதுடன், இக்கட்டணத்தை எந்தவொரு இலங்கை வங்கிக்கிளையின் ஊடாகவும் செலுத்த முடியும். அவ்வாறு செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டில் உள்ள அச்சு இலக்கங்களை விண்ணப்பத்தில் உரிய இடத்தில் உள்ளிடவும். பணம் செலுத்திய பின்னர் பெறப்பட்ட பற்றுச்சீட்டை விண்ணப்பதாரி தன்வசம் பாதுகாப்பாக வைத்திருக்கவும். (இம்முறை ATM இயந்திரத்தின் ஊடாக அல்லது இணையத்தள வங்கி சேவைகளின் ஊடாக பணம் செலுத்த முடியாது)

**9. இணைய வழி ஊடாக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும் போது கவனத்தில் கொள்ளவேண்டியவை:**

9.1. விண்ணப்பத்தை ஆங்கில மொழியில் மட்டுமே பூர்த்தி செய்தல் வேண்டும்.

9.2. க.பொ.த (உ.தர) பரீட்சையில் பயன்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டை இலக்கத்தையே பயன்படுத்த வேண்டும்.

9.3. உரிய பரீட்சை இலக்கத்தை உள்ளிட்டதும் க.பொ.த (உயர் தர) பரீட்சை பெறுபேறுகள் மற்றும் க.பொ.த (சா.தர) பரீட்சை பெறுபேறுகள் தானாகவே உருவாகும். எனினும் அந்த பெறுபேறுகளில் ஏதாவது முரண்பாடுகள் இருப்பின், உங்களிடம் உள்ள பெறுபேற்று ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுபேறுகளை அதற்கு கீழே உள்ள பிரிவில் குறிப்பிடவும்.

**10. <u>விஷேட கவனத்திற்கு :</u>**

10.1. வர்த்தமானி அறிவித்தல் மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்றாக வாசித்து தெளிவு பெற்ற பின்னர், இதற்காக தகுதி பெற்ற விண்ணப்பதாரிகள் இணையவழி ஊடாக விண்ணப்பத்தை பூர்த்தி செய்யும் போது தொழில்நுட்ப ரீதியில் ஏதாவது சிக்கல்கள் எழுந்தால் மட்டும் அந்த தொழில்நுட்ப சிக்கல்கள் தொடர்பாக சுகாதார அமைச்சின் மனித வள முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்பு பிரிவின் **0112 340 007** எனும் தொலைபேசி இலக்கத்துடன் வார நாட்களில் (அரச விடுமுறை நாட்கள் தவிர்ந்த) தொடர்பு கொண்டு அது தொடர்பான அறிவுறுத்தல்களைப் பெறலாம். **hrcodmoh@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரியிலும் தொடர்பு கொள்ளலாம். (இதன்போது எப்போதும் உங்கள் தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் உங்களை தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கத்தையும் குறிப்பிடுவது அவசியமாகும்)

**<u>பிற விடயங்கள் தொடர்பாக விசாரிப்பதைத் தவிர்க்கவும்.</u>**

10.2 பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை இணையவழி ஊடாக சமர்ப்பித்த பிறகு, அதன் அச்சுப் பிரதியை எடுத்து பாதுகாப்பாக தம்வசம் வைத்திருக்கவும்.

10.3 வர்த்தமானி அறிவித்தலின் 9.1 பந்தியின்படி நேர்முகப்பரீட்சை நடத்திய பிறகு, தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் பற்றிய தகவல்கள் இந்த அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்படும் என்பதுடன், யாருக்கும் தனிப்பட்ட முறையில் அறிவிக்கப்பட மாட்டாது. இருப்பினும், அவ்வப்போது எழும் விஷேட தகவல்கள் பற்றி தெரிவிக்க அவசியமானால் அவற்றை நீங்கள் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த தொலைபேசி இலக்கம் அல்லது மின்னஞ்சல் ஊடாக மேற்கொள்ளப்படும். எனவே, விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த தொலைபேசி இலக்கம் அல்லது மின்னஞ்சல் முகவரிகளில் மாற்றம் செய்யாமல் அவ்வாறே வைத்திருப்பது உங்கள் பொறுப்பு என்பதுடன், அவற்றின் மாற்றங்கள் காரணமாக அல்லது செயலற்ற நிலையில் இருப்பதால் உரிய தகவல்கள் குறித்த நேரத்தில் தொடர்பாடல் இல்லாமையால் ஏற்படும் எந்தவொரு பிரச்சனைக்கும் இந்த அமைச்சு பொறுப்பல்ல.